# காவிரிப்பூம்பட்டிணம்: பண்டையத் தமிழகத்தின் சிறப்பான வணிக நகரம் ஓர் மதிப்பீடு

**முனைவர் ம. பவானி**
**உதவிப் பேராசிரியர், வரலாற்றுத்துறை**
**வே. வ. வன்னியபெருமாள் பெண்கள் கல்லூரி, விருதுநகர்**

## முன்னுரை

தமிழகத்தில் மதுரை, காஞ்சிபுரம், கும்பகோணம், தொண்டி, கொற்கை, முசிறி, தஞ்சாவூர், செஞ்சி உள்ளிட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஊர்கள் பல உள்ளன. ஒவ்வொரு ஊரும் தனக்கென தனிச் சிறப்பு அடையாளத்தைக் கொண்டுள்ளது. இவற்றுள் மதுரை, காஞ்சிபுரம், கும்பகோணம் முதலியவை கோவில் நகரங்களாக அறியப்படுகின்றன. இம்மூன்றில் முக்கியமாக மதுரை கோவில் நகராக மட்டுமின்றி தமிழர்களின் வரலாறு மற்றும் பண்பாட்டு அடையாளங்களைக் கொண்டும் திகழ்கிறது. தமிழக நகரங்களின் சிறப்பை அறிந்து கொள்வதற்கு பல்வேறு இலக்கியச் சான்றுகள் துணை நிற்கின்றன. ஆனால் இலக்கியப் பதிவுகளோடு தொல்லியல் சான்றுகளும் கிடைக்குமானால் அந்நகரின் வரலாறு மறுக்க முடியாத சான்றுகளால் அமையப்பெறும். அந்த வகையில் தமிழகத்தில் மதுரை நகர் பற்றி ஏராளமான இலக்கியக் குறிப்புகளும் தொல்லியல் சான்றுகளும் கிடைத்துள்ளது. இதன் மூலம் தமிழகத்தில் மதுரை நகர் பற்றி ஏராளமான இலக்கியக் குறிப்புகளும் தொல்லியல் சான்றுகளும் கிடைத்துள்ளது. இதன்மூலம் தமிழகத்தில் மதுரை என்பது தொடர் வரலாற்றுச் சான்றுகள் கொண்ட நகரமாக இருந்து வருகிறது என்பது தெளிவு. பாண்டியநாட்டின் தலைநகரம், சங்கம் வைத்து தமிழ் வளர்த்த நகரம் கோவில் மாநகரம் உள்ளிட்ட பல அடைமொழிகள் மதுரைக்குச் சொந்தம். அதுபோல தமிழகத்தில் பல்வேறு நகரங்களுக்கும் சிறப்புகள் உண்டு. அவ்வகையில் தொண்டி கொற்கை துறைமுக நகராகவும் தஞ்சை செஞ்சி அரசுகளின் தலைநகரங்களாகவும் இருந்துள்ளன. தமிழக மூவேந்தர்களான சேர, சோழ, பாண்டியர்களின் தலைநகராக முறையே வஞ்சி, தஞ்சை, மதுரை விளங்கியது. மூவேந்தர்கள் தலைநகரில் ஆட்சி செய்தாலும் வணிகம், பண்பாட்டு நோக்கில் பல நகரங்களை நிர்மானித்தனர். அந்த வகையில் சோழ மண்டலத்தில் சோழர்களின் வர்த்தக நகராகவும் துறைமுக நகராகவும் விளங்கிய நகரமே பூம்புகார் என்ற காவிரிப்பூம்பட்டிணம் ஆகும்.

## காவிரிப்பூம்பட்டிணம் பெயர்க்காரணம்

காவிரி தமிழகத்தின் முக்கியமான ஆறுகளில் ஒன்று “சோழநாடு சோறுடைத்து“ என்ற வாக்கியத்திற்கு காரணமாக அமைந்த நதி காவிரி. கர்நாடகத்தின் குடகு மலையில் உற்பத்தியாகி சோழநாட்டின் தஞ்சை நிலப்பகுதியை வளப்படுத்தி சோழநாட்டின் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கு ஆதாரமாக விளங்கும் ஆறு காவிரி. இந்நதியின் இரு பக்கங்களிலும் பல நகரங்கள் தோன்றி வரலாற்றில் அழியாப் புகழுடன் விளங்கியுள்ளது. அந்த வகையில் வணிக நகராகவும் துறைமுக நகராகவும் விளங்கும் காவிரிப் பூம்பட்டிணமும் காவிரியின் கரையிலே அமைந்த ஊராகும். காவிரி நதி கடலில் கலக்கும் முகத்துவாரத்தில் அமைந்த நகரம் என்பதால் இந்நகரம் காவிரிப்பூம்பட்டிணம் என அழைக்கப்பட்டு வருகிறது. “பட்டிணம்” என்ற சொல் “நகரம்” என்பதை குறிப்பதாகும். கடற்கரை ஓரத்திலுள்ள நகரை பண்டைய தமிழர்கள் பட்டிணம் என்ற சொல்லால் குறித்தனர். மேலும் பூக்கள் நிறைந்த வளமான துறைமுகப் பகுதி என்பதால் இவ்வூர்

பூம்புகார் என்ற பெயர் பெற்றது. வரலாற்றில் முற்காலச் சோழர்களின் தலைநகராக இருந்த இந்நகரம் புகார் எனவும், பூம்புகார் எனவும் காவிரிப்பட்டிணம் எனவும் அழைக்கப்பட்டது. சங்க இலக்கியங்கள் இந்நகரை புகார் என்றே சிறப்பித்துப் பேசுகின்றது. சங்க இலக்கியமான மணிமேகலையில் இவ்வூர் காகந்தி எனக் குறிப்பிடப்படுகிறது. கி.பி.5 ம் நூற்றாண்டில் இங்கு தங்கியிருந்த புதத்தத்தர் எனும் துறவி இவ்வூரை காவேரிப்பட்டிணம் எனக் குறிப்பிடுவத்தோடு இந்நகரின் தோற்றம் மக்கள் வாழ்வியல் முறைகள் குறித்து தெளிவாக்க் கூறியுள்ளார். மதுரைக் காஞ்சி விவரிக்கும் மதுரை நகரின் நாளங்காடி, அல்லங்காடிகள் போல காவிரிப்பூம்பட்டிணத்திலும் ஏராளமான கடைகள் இருந்தன என்று தொல்லியல் ஆய்வாளர் K.V. ராமன் பதிவு செய்துள்ளார். சங்க காலத்தைத் தொடர்ந்து இடைக்காலத்திலும் காவிரிப் பூம்பட்டிணம் என்ற பெயரே உள்ளது.

**வணிக நகர்**

சங்க காலத்தில் வணிகம் சிறப்பாக நடைபெற்ற நகர்களில் மதுரை கொடுமணல் முக்கியமானவை. ஆனால் மதுரை, கொடுமணல் ஏற்றுமதி, இறக்குமதி நேரடியாக நடந்த இடமாக இருந்திருக்கவில்லை. துறைமுக நகர்களில் இருந்த்து கொண்டு வரப்பட்ட பொருட்கள் மேற்கண்ட ஊர்களில் பண்டக சாலைகள் மூலமாக விற்பனையானது. ஆனால் சோழநாட்டின் பூம்புகார் நகர் ஏற்றுமதி, இறக்குமதி நடநத இடம் மட்டுமல்ல வணிக பண்டக சாலையாகவும் திகழ்ந்துள்ளது. சங்க இலக்கியங்கள் கல்வெட்டுக்கள் இதை உறுதி செய்கின்றன. சோழ நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பெரும் வணிகச் சாலைகள் பூம்புகார் நகரை நோக்கிச் சென்றதாகவும் அச்சாலையில் ஆங்காங்கே சோற்றுச் சத்திரங்கள், சதுக்கபூதம் என்று அழைக்கப்பட்ட சிறு தெய்வ ஆலயங்கள் இருந்ததாக வரலாற்றாளர் ந. சுப்பிரமணியன் குறிப்பிடுகிறார். பண்டைத் தமிழகத்தில் யவனர்கள் புகார் நகர் வந்து வணிகம் செய்தனர் என்பதை சங்க இலக்கியமான பட்டிணப்பாலை குறிப்பிடுகிறது. சோழர்களின் சிறப்பான இந்த துறைமுக நகரில் ரோமானியரான யவனர்கள் வந்திறங்கி வணிகம் செய்தனர் என்று விளக்குகிறது மணிமேகலை. புகார் நகர்த் துறைமுகத்தில் இறக்குமதியான பொருட்கள் பற்றி பட்டினப்பாலை பின்வருமாறு விவரிக்கிறது.

**“நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்**
**காலின் வந்த கருங்கறி மூடையும்**
**வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்**
**குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்**
**தென்கடல் முத்தும் குணகடல் துக்ரும்**
**கங்கை வாரியும் காவிரிப் பயனும்**
**ஈழத்து உணவும் காழகத் தாக்கமும்**
**அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி**
**வளம்தலை மயங்கிய நனந்தலை மறுகின்”** 135-193.

பூம்புகார் துறை முகத்தில் எண்ணற்ற பொருட்கள் ஏற்றுமதியாயின என்பது இதன்மூலம் தெளிவாகிறது. எப்பொழுதும் துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதி பொருட்கள் மூடைகளாகக் கட்டப்பட்டு அமுக்கி வைக்கப்பட்டிருந்தது. மலைபோல் குவிந்து கிடந்த அந்த பொருட்களின் மேல் நாய்கள் ஆடுகள். ஏறிகுதித்து விளையாடின என்பதை

**“பொதிமுடைப் போரேறி**
**மழையாடு சிமைய மால்வரைக் கவாஅன்**
**வரையாடு வருடைத் தோற்றம் போலக்**
**கூருகிர் ஒமலிக் கொடுந்தாள் ஏற்றை**
**ஏழகத் தகரொடு உகளும் முன்றில்“**

பட்டினப்பாலை விளக்குகிறது.

புகார் நகர் துறைமுகத்தில் உணவுப் பண்டங்கள் தவிர்த்து மேலை நாடுகளிலிருந்து அணிகலன்களும் இறக்குமதியாயின அவை புகார் நகரின் பந்தர் என்னுமிடத்தில் வைக்கப்பட்டிருந்தது என்பதை

“**நன்கல வெறுக்கை துஞ்சும் பந்தர்**” (55:4)

என்ற வரிகள் மூலம் பதிற்றுப்பத்து விளக்குகிறது.

புகார் நகரின் வணிகம் மூலமாக ஏராளமான யவனக் காசுகள் இங்கே தொல்லியல் ஆய்வுகள் மூலமாக கிடைக்கப் பெற்றுள்ளன. கொடுமணல், பொருந்தல் அரிக்கமேடு உள்ளிட்ட இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் மூலம் கிரேக்க, ரோமானிய நாணயங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

பண்டைக் காலத்தில் வாணிகம் பண்டமாற்று முறையிலும் நடந்துள்ளது என்பதை அறியலாம். அத்தகு வணிகம் பூம்புகார் துறைமுகத்தில் வணிகர்களிடையே நடந்துள்ளது என்பதற்கு இலக்கியச் சான்றுகள் உள்ளன. புகார்த் துறைமுகத்தில் உள்நாட்டு வணிகப் போக்குவரத்திற்கென்று தனி படகுகள் இருந்தன. அப்படகுகளில் வெள்ளுப்பை ஏற்றிச் சென்று வணிகர்கள் படகில் விற்பனை செய்தனர். வெள்ளுப்புக்கு மாற்றாக நெல்லைப் பெற்றனர். இத்தகைய உள்ளூர் வணிகப் படகுகள் காவிரிப்பூம்பட்டிணத் துறைமுகத்தில் நின்றன என்கிறது பட்டினப்பாலை.

”**வெள்ளை உப்பின் கொள்ளை சாற்றி**
**நல்லொடு வந்த வல்வாய்ப் பஃறி**
**பனைநிலைப் புரவியின் அணைமுதற் பிணிக்கும்**
**கழிசூழ் படப்பைக் கலியாணர்**”.(29-32)

இப்பாடலில் வரும் படகுத்துறை K.V. ராமன் அவர்களால் அகழாய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சிறப்பு வாய்ந்த இந்த படகுத்துறை புகார்நகரின் அருகில் கீழையூர் என்ற இடத்தில் கண்டறியப்பட்டது. அந்த இடத்தில் புலிச்சின்னம் பொறிக்கப்பட்ட காசு கிடைத்திருப்பது சங்க காலத்தில் இப்பகுதி முக்கிய வணிக நகராக இருந்தமைக்குச் சான்றாகும்.

காவிரிப் பூம்பட்டிணம் துறைமுகத்தில் சிறு கப்பல்கள், படகுகள் தவிர்த்து பெருங்கலங்கள் வெளிநாடுகளிலிருந்து சரக்குகளை கொண்டு வந்தன. அந்த கப்பலின் பாய்கள் விரித்தபடியே துறைமுகத்தில் நங்கூரமிட்டு இருந்தன என்ற செய்தியை

“............ **கூம்பொடு**
**மீப்பாய் களையாது மிசைப்பரம் தோண்டாது**
**இடைப்புலப் பெருவழிச் சொரியும்**
**கடற்பஃறா ரத்த நாடுகிழ வோயே**” (**புறம்** 30:10-14)

புறநானூறு தெரிவிக்கிறது.

வர்த்தகம் செய்ய வந்த வெளிநாட்டவர்கள் இங்கு தங்குவதற்கு குடியிருப்புகளும் உருவாக்கப்பட்டிருந்த்து. அது “யவனர் இருக்கை” என சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்படுகிறது. வணிகத்தால் செழித்த புகார் நகரில் வணிகம் நடைபெறும் நேரங்கள் வணிகங்கள் பெருமளவில் கூடினர். அதாவது திருவிழா நடக்கும் ஊரில் பலவூர் மக்கள் சென்று கூடுவது போல எண்ணற்ற வணிகர்கள் புகார் நகரில் கூடினர். கடலில் செல்லும் கப்பல்கள் வழி தவறிச் சென்று விடக் கூடாது என்பதற்காக உயரமான கலங்கரை விளக்கங்கள் புகார் துறைமுகத்தில் இருந்தன.

**முடிவுரை**

மேற்கண்ட தகவல்கள் காவிரிப்பூம்பட்டிணத்தின் செல்வச் செழிப்பையும் அங்கிருந்து நடைபெற்ற வணிகச் செயல்பாடுகளையும் தெளிவாக விவரிக்கின்றன. காவிரிப்பூம்பட்டிணத்தின் சிறப்பினை விளக்குவதற்கு இலக்கியச் சான்றுகளே அதிகமாக இருப்பினும் 1950-க்கு பிறகு இப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள் கண்டறியப்பட்ட பொருட்கள் இங்கு தொடர்ச்சியாக வணிக நடவடிக்கைகள் இருந்துள்ளதை உறுதிப்படுத்துகின்றன. பூம்புகாரின் அருகே கீழையூரில் கண்டறியப்பட்ட செங்கல் கட்டுமானச் சுவர் வானகிரிப் பகுதியில் கண்டறியப்பட்ட நீர்த்தேக்க அமைப்பு போன்றவை காவிரிப்பூம்பட்டிணம் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் பொருளாதார மேம்பாடு அடைவதற்கான உறுதியான நடவடிக்கையாக அமைந்தது. சுருக்கமாக காவிரிப்பூம்பட்டிணம் புகார் நகரின் வணிக வளம் சோழப் பேரரசின் செழிப்பிற்கு மட்டுமன்றி பழங்கால தமிழக மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்கு துணையாக அமைந்தது எனலாம்.